**O.S.No. 104/2015**

**Date 07.02.2025**

**வா.சா.4 மாரியப்பன்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். வாதியின் முந்தைய வாழ்க்கை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிக்கு யாருடன் திருமணம் நடைபெற்றது, அந்த திருமணம் என்ன ஆனது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி கோபாலகிருஷ்ணநாடாரின் வீட்டில் முதலில் வாடகைக்கு வந்தார் என்றால் சரியல்ல. சொந்தமாக குடியேறினார். பஞ்சவர்ணத்திற்கும் மேற்படி கோபாலகிருஷ்ணநாடாருக்கும் எந்த நீதிமன்றம் மூலமும் விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணநாடார் அவர்கள் சகோதரர்கள் அனைவரும் சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டு சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். முருகேஸ்வரி அவருக்கு கிடைத்த பாகத்தினை கிரையம்கொடுத்து விட்டார் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களுக்கு கிடைத்த பாகத்தை அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். வாதிக்கும் கோபாலகிருஷ்ணநாடாரின் நடந்த திருமணத்திற்கு நான் போகவில்லை. உங்கள் ஊரில் திருமணம் நடைபெற்றால் ஊர் காசு வசூலித்து நாட்டாமை அதை பதிவேட்டில் பதிவு செய்யப்படுவது வழக்கம் என்றால் சரிதான். வாதியின் திருமணத்திற்கு ஊர்காசு வசூலித்தது குறித்து நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷணநாடாரின் வீட்டில் மனைவி ஸ்தானத்தில் வாதி குடியிருந்து வந்தார் என்று சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. முதல் விசாரணை சங்கதிகள் நான் சொல்ல சொல்ல கணிணிமயமாக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணை கூறியுள்ள சங்கதியான வாதி கோவில் கொடை விழாக்களுக்கு வரிசெலுத்தியதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. வாதி கோபாலகிருஷ்ண நாடாரின் மனைவி கிடையாது என்றால் சரியல்ல. வாதிக்கு முந்தைய வாழ்க்கையின் வாயிலாக இரண்டு குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். மூத்த மகனுக்கு 25 வயது இருக்கும். வாதிக்கு 2வது திருமணம் கோபாலகிருஷ்ணநாடாருடன் நடைபெற்ற அவரது குழந்தைகளுக்கு 6,7 வயது இருக்கும் என்றால் சரிதான்.

26 ஆண்டுகளுக்கு முன்பு வாதிக்கும் கோபாலகிருஷ்ணநாடாருக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. முதல் விசாரணை சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் சுமூகமான உறவு கிடையாது என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**